FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8301691

1. District : Thiruvallur PS: Vigilance and Anti Corruption Year: 2026 FIR No.: 10/AC/2026/Tvl Date: 8/7/2026 at about 17.00 hrs
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்: U/s. 7(a), 12 r/w 7(a) of the
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: PC (Amendment) Act, 2018
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 8/7/2026 Date to : 8/7/2026
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் between நாள் வரை
Time Period : Time from : 02.30 hrs Time to : 10.00 hrs.
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 8/7/2026 Time : 16.30 hrs.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 8/7/2026 Time : 17.00 hrs.
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Written.
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: North-East / about 75 kms.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : — (b) Address : Modern Integrated check post Pothiluppam at Elavoor, Cummidipoondi Taluk, Thiruvallur Dt.
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : Thiruvallur
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. G. Dinesh (b) Father's/ Husband's Name : Gunathayan
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 42y (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : — Place of Issue : —
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Dy. Tahsildar (g) Address : AC Excise, Collectorate, Thiruvallur
தொழில் முகவரி I/c District Dy. Inspection cell officer, Thiruvallur.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Accused: (A) Tr. S. Ram Kannan, MVI (NT), (B) Tmt. A. Sathya, Assistant, both are at Pothiluppam Modern Integrated check post, Elavoor, Cummidipoondi, Tk, TCA Dt (C) Tr. L. Ajith, S/o Lourthu, (D) Tr. G. Selvazhagan, S/o. Gopal, and (E) Tr. R. Sathish, S/o. Ravi A-3 to A-5 - private Individuals

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கோடுப்பதில் தாமதம்

— Nil —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Seized un-accounted, un-explained bribe amount of Rs. 3,20,370/- during the D&C on 08/7/2026 between 02.30 hrs and 10.00 hrs.

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

Submitted:- On 8/7/2026, Tiruvallur VACC Dsp handed over a letter, proceedings, seized bribe amount of Rs. 3,20,370/-. copy of the concerned documents for registering FIR and I registered a FIR in Tiruvallur VACC crno: 10/AC/2026/TVL, U/s. 7(a), 12 r/w 7(a) of the prevention of Corruption (Amendment) Act, 2018. The FIR contents follows as below:-

[FIR Content follows in separate sheet...]

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

8/7/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

8/7/2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 09/7/2026 at about 11.00 hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் [G.S. TAMILARASI]
Rank: நிலை INSPECTOR No. எண்
VACC, Tiruvallur.

(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.10/AC/2026/TVL U/s. 7 (a) & 12 r/w. 7 (a) of the Prevention of Corruption (Amendment) Act - 2018 Continuous...)

அனுப்புநர் திரு.சா.தினேஷ், வயது-42, த/பெ,. சாத்தையய்யா, துணை வட்டாட்சியர்/கண்காணிப்பாளர், கலால் பிரிவு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், (I/c.) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், திருவள்ளூர் மாவட்டம், பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு & கண்காணிப்பு பிரிவு, திருவள்ளூர். ந.க.எண்.13187/2026/அ3, நாள்- 08.07.2026 அய்யா, பொருள்:- இருத்துறை திடீர் கூட்டாய்வு - திருவள்ளூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - பெத்திக்குப்பம் ஒருங்கிணைந்த சோதனை சாவடி, எளாவூர், கும்முடிப்பூண்டி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம் - இருதுறை திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது - மேல் நடவடிக்கை எடுப்பது - தொடர்பாக, பார்வை:- 1) மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கற்பட்டு மாவட்டங்கள், இருப்பு காஞ்சிபுரம் அவர்களின் கடித ந.க.எண்.100/2026/I1, நாள்-07.07.2026 & 2) இருதரப்பு திடீர் கூட்டுத்தணிக்கை செயல்முறைகள், நாள் - 08.07.2026, திருவள்ளூர் மாவட்டம், கும்முடிப்பூண்டி தாலுக்கா, எளாவூரில் செயல்படும் பெத்திக்குப்பம் ஒருங்கிணைந்த சோதனை சாவடிகளில் சென்னை - ஆந்திர மாநிலத்திற்கு செல்லும் வெளிச்செல்கை சோதனை சாவடியில் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவின் காவல் துணை கண்காணிப்பாளர் ஆகியோர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரிலும், செல்போன் தகவலின் பேரிலும் பெத்திக்குப்பம் நவீன ஒருங்கிணைந்த சோதனைச்சாவடி, (இருப்பு) எளாவூரில் இயங்கி வரும் மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில் நுட்பம் இல்லாத) வெளிச்செல்லுதல் மற்றும் உள்வருகை அலுவலகங்களில் வாகன் ஓட்டுநர்கள் மற்றும் உரிமையாளர்களிடமிருந்து அதிகப்படியான லஞ்சம் பெறுவதாக கிடைத்த இரகசிய தகவலை தொடர்ந்து, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்திரவுப்படி, எனது தலைமையில் திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவின் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் மற்றும் அவரது குழுவினரின் உதவியுடன் வெளிச்செல்கை சோதனை சாவடியை இன்று 08.07.2026-ந்தேதி அதிகாலை 02.30 மணிமுதல் காலை 10.00 மணிவரை மேற்கொண்டதில், மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ராம் கண்ணன், 4 தனிநபர்கள், 4 & 5 பூத்துகளிலும், அலுவலக ஸ்டீல் ரேக்கின் அறை மற்றும் சோதனை சாவடியிலிருந்து ஓடிய நபர் தூக்கி போட்ட பணம் ஆகியவைகள் சேர்ந்து ரூ.3,20,370/-ஐ (500X600, 200X51, 100X91, 50X14, 20X17, 10X3) கணக்கில் வராத காரணம் கூறமுடியாத லஞ்சப்பணம் என முடிவு செய்து கைப்பற்றப்பட்டது. மேலும், அலுவலர்கள் மற்றும் தனிநபர்களின் வாக்குமூலங்கள் மற்றும் அவர்களால் கொடுக்கப்பட்ட தன் விளக்கக் கடிதங்கள் மற்றும் சம்பவயிடத்தில் கைப்பற்றப்பட்ட ஆவணங்களின் நகல்கள் ஆகியவற்றை தங்களிடம் இக்கடிதத்துடன் இணைத்து மேல் நடவடிக்கைக்காக தங்களிடம் ஒப்படைக்கிறேன்.தங்கள் உண்மையுள்ள, ஒப்பம்XXX(சா.தினேஷ்),

(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.10/AC/2026/TVL U, 7 (a) & 12 r/w. 7 (a) of the Prevention of Corruption (Amendment) Act, 2018 Continuous...)

துணை வட்டாட்சியர்/கண்காணிப்பாளர், கலால் பிரிவு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருவள்ளூர். கூடுதல் பொறுப்பு மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், திருவள்ளூர். இணைப்பு - 1) ரொக்கம் ரூ.3,20,370/- (500X600, 200X51, 100X91, 50X14, 20X17, 10X3), 2) செயல்முறை ஆணை அசல், 3) மோட்டார் வாகன ஆய்வாளர் (தொ.அ), உதவியாளர் திருமதி.சத்யா. தனிநபர்களான அஜித், சதீஷ், மெய்யழகன் ஆகியோர்களின் வாக்குமூலங்களை நான் பதிவு செய்தது, 4) மோட்டார் வாகன ஆய்வாளர் (தொ.அ), உதவியாளர் திருமதி.சத்யா. தனிநபர்களான அஜித், சதீஷ், மெய்யழகன் மற்றும் முகமதி சித்திக் ஆகியோர்களின் தன் விளக்க கடிதங்கள் மற்றும் 5) கைப்பற்றப்பட்ட அலுவலக பதிவேடுகளின் நகல்கள். மேற்படி கடிதத்தில் காவல் துணை கண்காணிப்பாளரால் என்னை வழக்கு பதிவு செய்ய அனுமதித்து கையொப்பம் செய்துள்ளதும், அது என்னால் ஒப்புதல் பெற்றதும் அடங்கியது. மேலும், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரால் தயார் செய்யப்பட்ட இரு துறை திடீர் கூட்டாய்வு செயல்முறையின் விவரம் வருமாறு- இருதரப்பு திடீர் கூட்டாய்வு செயல்முறை காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் (இருப்பு) காஞ்சிபுரம், மற்றும் திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளர் ஆகியோர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரிலும், செல்போன் தகவலின் பேரிலும் பெத்திக்குப்பம் நவீன ஒருங்கிணைந்த சோதனைச்சாவடி, (இருப்பு) எளாவூரில் இயங்கி வரும் மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில் நுட்பம் இல்லாத) வெளிச்செல்லுதல் மற்றும் உள்வருகை அலுவலகங்களில் வாகன ஓட்டுநர்கள் மற்றும் உரிமையாளர்களிடமிருந்து அதிகப்படியான லஞ்சம் பெறுவதாக கிடைத்த இரகசிய தகவலை தொடர்ந்து, அதுசம்மந்தமாக, திடீர் சோதனை மேற்கொள்ள காஞ்சிபுரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.பாக்கியலட்சுமி அவர்கள் மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் அவர்களுக்கு அளித்த வேண்டுதல் கடிதம் ந.க.எண்.100/2026/I1, நாள்-07.07.2026-ன்படி, இரண்டு மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்களாக கூடுதல் பொறுப்பில் அனுப்ப கேட்டுக்கொண்டதன்படி, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் திருமதி.ச.கவிதா, இ.ஆ.ப. அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.13187/2026/அ3, நாள்-07.07.2026-ன்படி எஸ்.தினேஷ், துணை வட்டாட்சியர்/கண்காணிப்பாளர், உதவி ஆணையர் (கலால்), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருவள்ளூர் ஆகிய என்னையும், திரு.ஜெ.விஜய் ஆனந்த், துணை வட்டாட்சியர்/வட்ட வழங்கல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், திருவள்ளூர் மாவட்டம் என்பவரையும் மேற்படி இருதரப்பு திடீர் கூட்டுத்தணிக்கையில் கூடுதல் பொறுப்பாக திருவள்ளூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராக திருவள்ளூர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவின் காவல் துணை கண்காணிப்பாளர் திரு.ஜெயக்குமார் மற்றும் அவருடைய விஜிலென்ஸ் குழுவினரின் உதவியுடன் இரண்டு குழுவினர்களாக மேற்படி சோதனை

(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.10/AC/2026/TVL U/s. 7 (a) & 12 r/w. 7 (a) of the Prevention of Corruption (Amendment) Act - 2018 Continuous...)

மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியதன்பேரில், இன்று 08.07.2026-ந்தேதி அதிகாலை சுமார் 02.30 மணியளவில் என் தலைமையில் திருவள்ளூர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு துணைக் காவல் கண்காணிப்பாளர் திரு.ஜெயக்குமார், காவல் ஆய்வாளர் திருமதி.தமிழ மற்றும் அவரது காவலர்கள் சேர்ந்து, பெத்திக்குப்பம் நவீன ஒருங்கிணைந்த சோதனைச்சாவடி, (இருப்பு) எளாவூரில் அமைந்துள்ள சோதனை சாவடிகளில் சென்னையிலிருந்து ஆந்திர மாநிலத்திற்குள் செல்லும் வெளிச்செல்லுதல் சோதனை சாவடியினை என் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட திடீர் இருதரப்பு கூட்டாய்வு நடவடிக்கை மேற்கொள்ள ஆரம்பித்தபோது, வெளியில் வாகனங்களை நிறுத்தி அனுப்பும் கீழ் குறிப்பிட்ட நபர்களையும், அலுவலர்களையும் பார்ட்டி சகிதம் மடக்கி எங்களை அறிமுகம் செய்துக்கொண்டு, அலுவலகத்திற்குள் அழைத்துவரப்பட்டது. அப்போது, சோதனை சாவடியின் ஆரம்ப இடத்தில் வாகனங்களை கவுண்டர்கள் வழியாக பிரித்து அனுப்பும் நபர் எங்களை கண்டதும் ஓடியவரை பின்தொடர்ந்து ஓடியதில் அவர் நிறுத்தப்பட்டிருந்த லாரிகளுக்கிடையே ஓடும்போது இரண்டு 500 ரூபாய் கட்டுகளை தூக்கி போட்டுக்கொண்டே ஓடினார். அதனை எடுத்துக்கொண்டு அலுவலகத்திற்குள் வந்து, சோதனை செய்த மேற்படி சோதனையின் விவரம் வருமாறு:-

தலைமை- மாவட்ட துணை ஆய்வுக்குழு உறுப்பினர்.	சா.தினேஷ், துணை வட்டாட்சியர்/கண்காணிப்பாளர், உதவி ஆணையர் (கலால்), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருவள்ளூர் மற்றும் கூடுதல் பொறுப்பு திருவள்ளூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்.
வெளிச்செல்கை சோதனை சாவடி ஆய்வின்போது கலந்து கொண்டவர்கள்.	1. திரு.ஆர்.ஜெயக்குமார், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிபபுப்பிரிவு, திருவள்ளூர்.
	2. திரு.ஜி.எஸ்.தமிழரசி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவள்ளூர்.
	3. திரு.E.சுதா, சிறப்பு உதவி ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றம் கண்காணிப்பு பிரிவு, திருவள்ளூர்.

மேற்படி வெளிச்செல்லுகை சோதனை சாவடியில் பணியில் இருந்தவர்களின் விவரம் பின்வருமாறு:-

வ.எண்.	பணியிலிருந்தவர்களின் பெயர் மற்றும் விலாசம்	பணத்தின் விவரம்	சோதனையின் விவரம்
1.	திரு.S.ராம் கண்ணன், வயது-51, மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில் நுட்பம் அற்ற), வெளிச்செல்கை சோதனை சாவடி.	அவருடைய பேண்ட் பாக்கெட்டில் ரூ.3,390/-ம், அவருடைய கருப்பு நிற பையில் ரூ.500/-ம் சேர்ந்து ரூ.3,890/-இருந்தது.	அப்பணம் குறித்து விசாரித்ததில் அப்பணம் அவருடைய அன்றாட செலவிற்காக, அதாவது அவர் கும்முடிப்பூண்டியில் வாடகை வீட்டில் வசிப்பதாகவும், அவர்

	கடந்த 11.06.2025-ந்தேதி முதல் பணிபுரிகிறார். கார் எண்.TN 57 AS 0010-Wagnor	4-வது பூத்தினுள் அமர்ந்திருந்தார்.	பயன்படுத்தும் பெட்ரோல் செலவிற்கு வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். ஆனால் கும்முடிப்பூண்டியில் வசிப்பதால், அவ்வளவு தொகை தேவையில்லை என்பதால் அப்பணம் ரூ.3,890/-ஐ லஞ்சப்பணம் என முடிவு செய்து கைப்பற்றினேன்.
2.	திருமதி.அ.சத்யா, வயது-47, க/பெ. அண்ணாதுரை. உதவியாளர். கடந்த ஜூலை/2025 முதல் பணிபுரிகிறார். முகவரி- எண்.146/151, கே.புதூர், கௌண்டபாடி அஞ்சல், ஈரோடு மாவட்டம்.	அவருடைய சட்டை பாக்கெட்டில் ரூ.600/- வைத்திருந்தார். 4-வது பூத்திற்கு வெளிப்பக்கமாக நின்றுக்கொண்டு இருந்தார்.	மேற்படி பணத்தை அவருடைய சொந்த செலவிற்காக வைத்திருப்பதாகவும், மூன்று நாட்களுக்கு ஒரு முறைதான் வீட்டிற்கு செல்வதாகவும் தெரிவித்தார். அதனால் அப்பணத்தை திருப்பி ஒப்படைக்கப்பட்டது.
3.	திரு.M.அருண் பிரகாஷ் ராஜா, வ/54, த/பெ. மகாலிங்கம். அலுவலக உதவியாளர், வெளிச்செல்கை சோதனை சாவடி. எண்.170C, ஆணைக்கால் பாளையம், முடக்குறிச்சி 44 புதூர் கிராமம், ஈரோடு மாவட்டம். கடந்த நவம்பர்/2025 முதல் பணிபுரிந்து வருவதாகவும், தற்போது எளாவூரில் வாடகை வீட்டில் வசிப்பதாகவும் தெரிவித்தார்.	அவருடைய காக்கி சட்டை பாக்கெட்டில் ரூ.150/- வைத்திருந்தார். 5-வது பூத்திற்கு அருகில் வெளியில் சேரில் அமர்ந்துக்கொண்டு இருந்தார்.	அப்பணம் குறித்து கேட்டதில், அவரது அன்றாட செலவிற்காக கொண்டுவந்ததாக தெரிவித்ததால், அப்பணத்தை திருப்பி அவரிடமே கொடுக்கப்பட்டது.
4.	திரு.கோ.மெய்யழகன், வ/51, த/பெ. கோபால், எண்.373, குருவி அகரம் கிராமம், தேர்வழி போஸ்ட், கும்முடிப்பூண்டி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம். கடந்த 2020-ம் ஆண்டு முதல் இந்த சோதனை சாவடியில் தனிநபர் உதவியாளராக அன்றாடம் ரூ.1,000/-ற்கு கூலி வேலையாக பணிபுரிவதாக தெரிவித்தார்.	இவர் மோட்டார் வாகன ஆய்வாளருக்கு உதவியாக வண்டிகளை மடக்கி ஓட்டுநர்களை அழைத்து வருதல் போன்ற வேலைகளை செய்யும் தனிநபர். 5-வது பூத்தின் நடைமேடையில் வாகனங்களை மடக்கிக்கொண்டு இருந்தார்.	இவரை சோதனை செய்ததில், அவரது பேன்ட் பாக்கெட்டில் ரூ.4,470/-ம், அவரது ஜட்டிக்குள் ரூ.11,600/-ம் என மொத்தம் ரூ.16,070/- இருந்தது. மேற்படி பணம் இன்றைய தினம் இரவு 08.00 மணிமுதல் வசூலான பணம் என்று தெரிவித்ததால் அப்பணம் வாகன ஓட்டுநரிடமிருந்து அதிகப்படியாக பெறப்பட்ட லஞ்சப்பணம் என முடிவு செய்து கைப்பற்றப்பட்டது.

(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.10/AC/2026/TVL U/s. 7 (a) & 12 r/w. 7 (a) of the Prevention of Corruption (Amendment) Act - 2018 Continuous...)

5.	திரு.ர.சதீஷ், வ/44, த/பெ. ரவி, எண்.11/76, கக்கன்ஜி நகர், வியாசர்பாடி, சென்னை-39. கடந்த 2020-ம் ஆண்டு முதல் இந்த சோதனை சாவடியில் தனிநபர் உதவியாளராக அன்றாடம் ரூ.1,000/-ற்கு கூலி வேலையாக பணியுரிவதாக தெரிவித்தார்.	இவர் மோட்டார் வாகன ஆய்வாளருக்கு உதவியாக வண்டிகளை மடக்கி ஓட்டுநர்களை அழைத்து வருதல் போன்ற வேலைகளை செய்யும் தனிநபர். 5-வது பூத்தின் நடைமேடையில் வாகனங்களை மடக்கிக்கொண்டு இருந்தார்.	அவருடைய பேன்ட் பாக்கெட்டில் ரூ.13,390/- பணம் இருந்தது. அதுகுறித்து விசாரித்ததில், இரவு 08.00 மணிமுதல் அவர் மடக்கிய வண்டிகளின் ஓட்டுநர்களிடமிருந்து மோட்டார் வாகன ஆய்வாளருக்காக வசூல் செய்தப்பணம் எனவும், உதவியாளர் திருமதி.சத்யா அவர்கள் ரூ.4,200/-ஐ அவரிடம் கொடுத்து வைத்துக்கொள் என்று கொடுத்ததாகவும் தெரிவித்ததால், அப்பணம் லஞ்சப்பணம் என முடிவு செய்து கைப்பற்றினேன்.
6.	திரு.M.முகமது சித்திக், வ/36, த/பெ. முகமது யுனஸ், விவேகானந்தா பள்ளி பின்புறம், துறாபள்ளம் கிராமம், எளாவூர் போஸ்ட், கும்முடிப்பூண்டி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம். கடந்த 2022-ம் ஆண்டு முதல் இந்த சோதனை சாவடியில் தனிநபர் உதவியாளராக அன்றாடம் ரூ.800/-ற்கு கூலி வேலையாக கணிணி பில் போடுதல் போன்ற வேலைகளை செய்வதாக தெரிவித்தார். 1-வது பூத்தில் அமர்ந்துக்கொண்டிருந்தார்.	இவர் 1-ம் கவுண்டரில் கணிணி பில் போட்டதாகவும், அதில் கடந்த 07.07.2026-ந்தேதி காலை முதல் இரவு 08.00 மணிவரை 12 வாகனங்களுக்கான வரி மற்றும் கட்டணம் ரூ.80,510/- பணம் வசூலானது என்றும், இரவு பணியில் ஒரு வாகனத்திற்கு இணக்க கட்டணம் (Compounding Fees) ரூ.5,000/-ம் பணம் செலுத்தியதற்கு ரசீது போடப்பட்ட விவரத்தை தெரிவித்தார்.	மேற்படி பணம் ரூ.85,510/-னை சரிபார்த்து மீண்டும் அவரிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. அவரை சோதனை செய்ததில் பணம் எதுவும் இல்லை. ஏனெனில் அவர் உள்ளூர் என்பதாலும், காலை 08.00 மணிக்குத்தான் கூலிப்பணம் ரூ.800/-ஐ மோட்டார் வாகன ஆய்வாளர் கொடுப்பார் என்றும் தெரிவித்தார்.
7.	திரு.எல். அஜித், வ/29, த/பெ. லூர்து, எண்.182, MGR தெரு, தண்டலம் கிராமம், ஆரம்பாக்கம் போஸ்ட், கும்முடிப்பூண்டி தாலுக்கா,	அவருடைய பேன்ட்டின் வலது பக்க பாக்கெட்டில் ரூ.50,000/- என 500 ரூபாய் கட்டு 1 மற்றும் ரூ.750/- பணம் அவரது இடது	மேற்படி பணம் ரூ.50,000/- ஐ மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்கள் இரவு 08.00 மணிமுதல் வசூலான தொகையின் ஒரு 500 ரூபாய் கட்டினை என்னிடம்

	திருவள்ளூர் மாவட்டம். கடந்த டிசம்பர்/2024 முதல் மோட்டார் வாகன ஆய்வாளருக்கு தேவையான டீ, காபி, டிபன், சாப்பாடு வாங்கித்தரும் வேலையை செய்வதாகவும், அதற்கு தினக்கூலியாக ரூ.3,000/-ம் மோட்டார் வாகன ஆய்வாளர் கொடுப்பதாகவும் தெரிவித்தார்.	பக்க பாக்கெட்டிலும் இருந்தது. 5-வது பூத்தருகில் நின்றுக்கொண்டு இருந்தார்.	இரவே வைத்துள்ளதாகவும் தெரிவித்ததை என முடிவு மொத்தம் ரூ.50,750/- கைப்பற்றினேன்.

மேற்படி வெளிச்செல்கை சோதனை சாவடியில் திரு.ராம் கண்ணன், மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில் நுட்பம் அல்லாத), திருமதி. சத்யா, உதவியாளர், திரு.அருண்பிரகாஷ் ராஜா, அலுவலக உதவியாளர் ஆகிய 3 அலுவலர்களும், திரு.அஜித், திரு.சதீஷ், திரு.மெய்யப்பன், திரு.சித்திக் ஆகிய 4 தனிநபர்களை தினக்கூலி அடிப்படையில் மோட்டார் வாகன ஆய்வாளர் அவருக்கு உதவியாக வாகனங்களை நிறுத்தவும், அதன் உரிமையாளர் அல்லது ஓட்டுநர்களை அழைத்துவந்து அவரிடம் அனுப்பவும், அவர் கூறும் தொகைகளை வசூல் செய்து வைத்துக்கொள்வதற்காகவும் கூலித்தொழிலாளர்களாக வைத்துள்ளார். மேலும், சோதனையை ஆரம்பிக்கும்போது, சோதனை சாவடியின் 5 மற்றும் 4-ம் பூத்துக்களுக்கு இடையே சேர் போட்டு அமர்ந்துக்கொண்டிருந்த நபர் ஓடும்போது நானும், தினகரன் போலீஸ் மற்றும் காவல் ஆய்வாளர் திருமதி.தமிழரசி ஆகியோர்கள் துரத்தும்போது, ஓரமாக நிறுத்தப்பட்டிருந்த லாரிகளுக்கு பக்கவாட்டில் ஓடிய நபர் தூக்கி போட்ட 500 ரூபாய் கட்டுகள் இரண்டினை எண்ணிப்பார்த்ததில், அதில் ஒரு கட்டில் ரூ.50,000/-மும் மற்றொரு கட்டில் ரூ.40,000/-மும் சேர்த்து ரூ.90,000/-ம் இருந்தது. ஓடிய நபர் குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர், உதவியாளர், அலுவலக உதவியாளர் ஆகியோரை விசாரித்தபோது, அவர்களுக்கு யார் என்றே தெரியாது என்று கூறினர். அதனால் தனிநபர்களை விசாரித்தபோது, ஓடிய நபரின் பெயர் மணிமாறன் என்றும் அவர் கும்முடிப்பூண்டி நத்தம் கிராமத்தைச்சேர்ந்தவர் என்றும் இதே சோதனைச்சாவடியில் சில மாதங்களாக வேலை பார்ப்பதாக தெரிவித்தனர். மேலும், கடந்த 07.07.2026-ந்தேதி காலை 08.00 மணிமுதல் இரவு 08.00 மணிவரை திரு.என்.சுமேஷ், மோட்டார் வாகன ஆய்வாளர் (தொ.அ), திருமதி.டி.கீதா, திரு.ஜி.வி.இராஜ்குமார், அலுவலக உதவியாளர் ஆகியோர்கள் பணியிலிருந்தபோது 12 வாகனங்களுக்கான கட்டண வரி வசூல் ரூ.80,510/-னை வசூல் செய்துள்ளதாகவும், அதன்பிறகு இரவு 08.00 மணிமுதல் மறுநாள் காலை 08.00 மணிவரை திரு.ராம் கண்ணன் அவர்களின் தலைமையில் பணியிலிருந்தபோது, ஒரு வாகனத்திற்கு (KA 01A 3093) Heavy Goods Vehicle-ற்கு Compounding Fees-ஆக ரூ.5,000/-ம் கணக்கு காட்டி பணத்தை வைத்திருந்தனர். அதுசம்மந்தமான விவரங்களை டவுன்லோடு செய்து அதில்

(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.10/AC/2026/TVL U/s. 7 (a) & 12 r/w. 7 (a) of the Prevention of Corruption (Amendment) Act - 2018 Continuous...)

நானும், மோட்டார் வாகன ஆய்வாளர் (தொ.அ) அவர்களும் கையொப்பம் செய்து கைப்பற்றிக்கொண்டேன். மேலும், 4-வது பூத்தில் வைக்கப்பட்டிருந்த காலியான ஜிப் கோப்பு ஒன்றில் வைக்கப்பட்டிருந்த பணத்தை எண்ணிப்பார்த்ததில் ரூ.11,990/- இருந்தது. அதேபோல், 5-வது பூத்தின் வெளியில் இருந்த பில்லரின் இடையே இருந்த காலி ஜிப் பையில் இருந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்ததில், ரூ.12,230/- பணம் இருந்தது. அப்பணம் குறித்து 4-வது பூத்தினுள் அமர்ந்திருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ராம் கண்ணன் அவர்களையும், வெளியில் நின்றுக்கொண்டிருந்த உதவியாளர் மற்றும் அலுவலக உதவியாளரிடமும் விளக்கம் கேட்டபோது, அப்பணம் குறித்து தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும், அப்பணத்தை ஓட்டுநர்களே கொண்டுவந்து வைத்துவிட்டு சோதனை சாவடியின் சீல் வைத்துக்கொண்டு செல்வதாக தெரிவித்தார்கள். மேலும், அலுவலகம் முழுவதும் சோதனை செய்ததில், அலுவலகத்தின் வலது பக்கத்தில் இருந்த இரும்பு ரேக்கில் இரண்டு பக்கங்களிலும் தலா 10 அறைகள் இருந்ததை சோதனை செய்தபோது, ஒரு பக்கம் இரண்டு அறைகளும், மற்றொரு பக்கத்தில் ஒரு அறையும் பூட்டப்பட்டிருந்தது. அதனை திறக்குமாறு மோட்டார் வாகன ஆய்வாளரை கேட்டபோது, சாவி எதுவும் இல்லை என்றும், அவர் பணிக்கு அறிக்கை செய்ததிலிருந்தே அதனை திறப்பதற்கான சாவியை யாரும் தரவில்லை என்றும் தெரிவித்தார். ஆனால், அனைவரையும் சோதனை செய்தபோது, தனிநபர் திரு.அஜித் அவர்களின் பாக்கெட்டில் இருந்த 2 சாவிகளை எடுத்து திறக்க முயற்சித்தபோது, ஒரு பக்கத்தில் உள்ள இரண்டு அறைகளும் திறந்தன. அவற்றை சோதனை செய்ததில், ஒரு அறையில் 500 ரூபாய் கட்டுகள் 2 மற்றும் சிறிது 500 ரூபாய் நோட்டுகள் என ரூ.1,22,000/-ம் பணம் இருந்தது. அப்பணம் குறித்து திரு.ராம் கண்ணன், திருமதி.சத்யா மற்றும் அலுவலக உதவியாளர் திரு.அருண் பிரகாஷ் ராஜா ஆகியோர்களிடம் விசாரித்தபோது, தங்களுக்கு தெரியாது என்றும் தெரிவித்தனர். மேற்படி பணம் குறித்து தனிநபர்களிடம் விசாரித்தபோது, அப்பணம் இரவு 08.00 மணிமுதல் வசூலான கணக்கில் வராத பணம் என்று தனிநபர் அஜித் தெரிவித்தார். அதனை மேற்படி இரும்பி ரேக்கின் வைத்து பூட்டி சாவியை வைத்துக்கொள்ளுமாறு தன்னிடம் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ராம் கண்ணன் அவர்கள் தெரிவித்ததை அதன்படி செய்ததாக தெரிவித்தார். மேலும், கையிருப்பு பணப்பதிவேடு குறித்து கேட்டதில், மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் மற்றும் உதவியாளர் இருவரும் வேகமாக அவர்களிடமிருந்த பணத்திற்கு ஏற்றாற்போல் எழுதிக்கொண்டு கையொப்பமிட்டதை நான் கவனித்து அதனை கைப்பற்றினேன். அதனை நகலெடுத்து, அதில் நான், மோட்டார் வாகன ஆய்வாளர் மற்றும் காவல்

(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.10/AC/2026/TVL U/s. 7 (a) & 12 r/w. 7 (a) of the Prevention of Corruption (Amendment) Act . 2018 Continuous...)

துணை கண்காணிப்பாளர் ஆகியோர்கள் கையொப்பம் செய்து கைப்பற்றப்பட்டது. மேலும். இவ்வலுவலக வருகைப்பதிவேடு குறித்து விசாரித்ததில். உதவியாளர் திருமதி.சத்யா அவர்கள் 2026-ம் ஆண்டிற்கான வருகைப்பதிவேடு. பணியாளர்களின் பணிபார்ப்பு பதிவேடு மற்றும் அனுமதிப்பதிவேடு ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்தார். சம்மந்தப்பட்ட பதிவேடுகளில் ஜூலை மாதத்திற்கான பக்கங்களை நகலெடுத்து அதில் நானும். உண்மை நகலென மோட்டார் வாகன ஆய்வாளர் மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர் ஆகியோர்கள் கையொப்பம் செய்து கைப்பற்றப்பட்டது. மேலும். அலுவலர்கள் மற்றும் தனிநபர்களின் விளக்கங்கள் கேட்டு அவர்களாலேயே எழுதி கொடுக்கச் சொல்லப்பட்டது. அதேபோல். மோட்டார் வாகன ஆய்வாளர் (தொ.அ), உதவியாளர், அலுவலக உதவியாளர். தனி நபர்களான திரு.அஜித். திரு.சதீஷ். திரு.மெய்யழகன். திரு.முகமது சித்திக் ஆகியோர்களை நான் விசாரணை செய்து அவர்களது வாக்குமூலங்களை சிறப்பு உதவி ஆய்வாளர் திருமதி.சுதா அவர்களின் உதவியுடன் தயார் செய்யப்பட்டது. ஆண் நபர்களை ஆண் காவலர்கள் கொண்டும். பெண் நபர்களை பெண் காவலர் கொண்டும் பரிசோதனை செய்யப்பட்டது.

மேலும் சோதனையின்போது கீழ்க்குறிப்பிட்டுள்ள பணத்தினை கணக்கில் வராத லஞ்சப்பணம் எனக்கருதி கைப்பற்றப்பட்டது. அவை முறையே-

வ.எண்.	பணியிலிருந்தவர்களின் பெயர் மற்றும் விலாசம்	கைப்பற்றப்பட்ட பணத்தின் விவரம்
1.	திரு.S.ராம் கண்ணன். வயது-51, மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில் நுட்பம் அற்ற), வெளிச்செல்கை சோதனை சாவடி.	ரூ.3,890/-
2.	திரு.கோ.மெய்யழகன். வ/51, (தனிநபர்) த/பெ. கோபால், எண்.373, குருவி அகரம் கிராமம். தேர்வழி போஸ்ட், கும்முடிப்பூண்டி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம்.	ரூ.16,070/-
3.	திரு.ர.சதீஷ். வ/44, (தனிநபர்), த/பெ. ரவி, எண்.11/76, கக்கன்ஜி நகர், வியாசர்பாடி, சென்னை-39.	ரூ.13,390/-
4.	திரு.எல். அஜித், வ/29, (தனிநபர்), த/பெ. லூர்து, எண்.182, MGR தெரு. தண்டலம் கிராமம், ஆரம்பாக்கம் போஸ்ட், கும்முடிப்பூண்டி தாலுக்கா. திருவள்ளூர் மாவட்டம்.	ரூ.50,750/-
5.	சோதனைச்சாவடியிலிருந்து ஓடிய திரு.மணிமாறன் என்ய தனிநபர் ஓடும்போது தூக்கி போட்டுவிட்டு சென்ற பணம்	ரூ.90,000/-
6.	இரும்பு ரேக்கிலிருந்த பூட்டப்பட்ட ஒரு அறையில் வைக்கப்பட்டிருந்த பணம்	ரூ.1,22,000/-

(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.10/AC/2026/TVL U/s. 7 (a) & 12 r/w. 7 (a) of the Prevention of Corruption (Amendment) Act - 2018 Continuous...)

7.	4-வது பூத்தில் வைக்கப்பட்டிருந்த ஜிப்-கோப்பில் வைக்கப்பட்டிருந்த பணம்	ரூ.11,990/-
8.	5-வது பூத்தில் வைக்கப்பட்டிருந்த ஜிப்-கோப்பில் வைக்கப்பட்டிருந்த பணம்	ரூ.12,280/-
	கைப்பற்றப்பட்ட மொத்த தொகை	ரூ.3,20,370/-

மேற்குறிப்பிட்ட திடீர் இருத்துறை கூட்டுத்தணிக்கை சம்மந்தமாக சோதனை செய்ததில் மோட்டார் வாகன ஆய்வாளர், தனிநபர்கள் மற்றும் அலுவலகத்திற்கு உள்ளே மற்றும் 4 மற்றும் 5 -ம் பூத்துகளில் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.3,20,370/- (500X600, 200X51, 100X91, 50X14, 20X17, 10X3) கணக்கில் வராத, விளக்கம் அளிக்கமுடியாத லஞ்சப்பணம் என முடிவு செய்து கைப்பற்றினேன். இக்கூட்டுத்தணிக்கையின்போது எந்த பொருளுக்கோ, பதிவேடுகளுக்கோ எந்த பாதிப்பு இன்றியும், அலுவலர்களில் பெண் அலுவலர்களை பெண் காவலர்களே சோதனை செய்தனர். அவர்களது வேலைகளை எந்த தடங்களுமின்றி தொடர்ந்து செய்ய அறிவுறுத்தப்பட்டது. மேலும், இன்று 08.07.2026-ந்தேதி காலை 08.00 மணிக்கு பணி மாற்ற வந்த திரு.D.ஜெகதீசன், மோட்டார் வாகன ஆய்வாளர் (தொ.அ), திருமதி.T.ஜமுனா என்ற உதவியாளர் ஆகியோர்களை முறைப்படி செய்ய வேண்டிய வேலைகளை செய்து, பணியினை தொடங்குமாறு அறிவுறுத்தப்பட்டது. இந்த குரூப்பில் வரவேண்டிய அலுவலக உதவியாளர் திரு.சந்திரமௌலி அவர்கள் மருத்துவ விடுப்பில் உள்ளார் என்ற தகவல் தெரிவிக்கப்பட்டது. மேலும் இந்த திடீர் கூட்டுத்தணிக்கையின் விவரத்தை ஒரு திடீர் இருதரப்பு கூட்டுத்தணிக்கை செயல்முறை ஒன்றை இன்று 08.07.2026-ந்தேதி அதிகாலை சுமார் 02.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு, காலை சுமார் 10.00 மணிக்கு முடிக்கப்பட்டது. இதில் மோட்டார் வாகன ஆய்வாளர் (தொ.அ) திரு.ராம் கண்ணன், உதவியாளர் திருமதி.சத்யா, காவல் துணை கண்காணிப்பாளர் திரு.ஜெயக்குமார், காவல் ஆய்வாளர் திருமதி.ஜி.எஸ்.தமிழரசி மற்றும் துணை வட்டாட்சியர்/கண்காணிப்பாளர், உதவி ஆணையர் (கலால்), கூடுதல் பொறுப்பு திருவள்ளூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகிய நானும் கையொப்பம் செய்தோம். மேலும் தனிநபர்களான திரு.அஜித், திரு.சதீஷ், திரு.மெய்யழகன் ஆகியோர்களை படித்துப்பார்த்து இதன் கடைசி பக்கத்தில் அவர்களது கையொப்பம் பெறப்பட்டது. அதன் நகல் ஒன்று மோட்டார் வாகன ஆய்வாளர் (தொ.அ) அவர்களுக்கு அளித்து கையொப்பம் பெறப்பட்டது. ஒப்பம்XXX 1) திரு.S.ராம் கண்ணன், வயது-51, மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில் நுட்பம் அற்ற), வெளிச்செல்கை சோதனை சாவடி, 2) திருமதி.அ.சத்யா, வயது-47.

(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.10/AC/2026/TVL U/s. 7 (a) & 12 r/w. 7 (a) of the Prevention of Corruption (Amendment) Act, 2018 Continuous...)

க/பெ. அண்ணாதுரை, உதவியாளர், வெளிச்செல்கை சோதனை சாவடி, பெத்திக்குப்பம் ஒருங்கிணைந்த நவீன சோதனை சாவடி, எளாவூர், திருவள்ளூர் மாவட்டம். 3)திரு.R.ஜெயக்குமார், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவள்ளூர். 4) திருமதி.ஜி.எஸ்.தமிழரசி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவள்ளூர். 5) திரு.சா.தினேஷ், வயது-42, த/பெ. சாத்தையா, துணை வட்டாட்சியர்/ கண்காணிப்பாளர், கலால் பிரிவு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருவள்ளூர்.

Honoured Madam, I received the above letter of the District Deputy Inspection Cell Officer along with Proceedings and unaccounted bribe amount of Rs.3,20,370/- and attested copy of connected documents through DSP/VAC/TLR and registered a case in Tiruvallur V&AC, Cr.No.10/AC/2026/TVL, U/s. 7(a) & 12 r/w. 7(a) of The Prevention of Corruption (Amendment) Act, 2018 on 08.07.2026 at about 17.00 hrs. and took up action. SdXXX**G.S.TAMIZHARASI,** Inspector of Police, Vigilance and Anti-Corruptiion, Thiruvallur.

The original FIR, seized un-accounted/un-explained bribe amount of Rs.3,20,370/- through Form-91 and other connected documents are submitted before the Hon'ble Principal District and Sessions Judge, Thiruvallur and other FIR copies are forwarded to Superior Officers concerned on 09.07.2026.

8/7/2026

G.S.TAMIZHARASI,
INSPECTOR OF POLICE
VIGILANCE & ANTI CORRUPTION
Thiruvallur - 602 001.